எம்.சி.ஓ.பி எண்: 3804 /2019 தேதி: 16.07.2025

மசா. : 1

பெயர் : ரவி

த/பெ. : ராகவலு

வயது : 55

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விபத்தை நேரில் பாா்க்கவில்லை என்றால் சாிதான். விபத்து யாருடைய அஜாக்கிருதையால் நடந்தது என்று எனக்கு நேரடியாக தொியாது என்றால் சரி. புகார் பவித்ரன் கொடுத்துள்ளார். அவர் என் மகனின் நண்பன். முதல் தகவல் அறிக்கை மாநகரபேருந்து மீதுதான் போடப்பட்டுள்ளது என்றால் சரி. விபத்து சமயத்தில் என் மகன் இருசக்கரவாகனத்தில் பின்னால் அமர்ந்து பயணம் செய்துள்ளார் என்றால் சரி. என் மகன் சென்ற இருசக்கரவாகனத்தின் கைப்பிடி பேருந்தில் இடிக்காவிட்டால் விபத்து ஏற்பட்டு இருக்காது என்றாலும் கீழே விழுந்து இருக்க மாட்டார் என்றால்சரி. அந்த மாநகரபேருந்தின் டயர் என் மகனின் தலையில் தலைக்கவசத்துடன் ஏறிவிட்டது என்றால் சரி. விபத்துக்கு முழுகாரணமும் மாநகரபேருந்துதான் என்றால்சரி. மாநகரபேருந்துதான் இழப்பீடு கொடுக்கவேண்டும் எ்னறால் சரி. விபத்து சமயத்தில் என் மகனுக்கு வயது 19. எனக்கு 3 ஆண் பிள்ளைகள். இறந்துவர் இரண்டாவது மகன். என் பெரிய மகன் தனியார் கம்பெனியில் வேலை பார்க்கிறார். மூன்றாவது மகன் தற்பொழுதுதான் எம்.பி. ஏ படித்து முடித்துள்ளார். நான் சென்னை மாநகராட்சி துாய்மை பணியாளராக பணிபுருகிறேன். பணி ஓய்வு பெறவில்லை. நான் மாதம் ரூபாய் 32000/– சம்பாதிக்கிறேன். மனைவி வேலை பார்க்கவில்லை.குடும்ப அட்டையில் 2005ம் வருடம் என்னுடைய வயது 44 என்றும் என் மனைவியின் வயது 38 என்றும் போடப்பட்டுள்ளது என்றால்சரி. அதன் படி பார்த்தால் இன்றையதேதியில் என்னுடைய வயது 65 என்றால் சரியல்ல. அவர்கள் தவறாக எழுதிஉள்ளார்கள். ஆதார் கார்ட்டில் சரியான வயது 55என்று காணப்படுகிறது. இழப்பீடு அதிகம் பெறுவதற்காக வயதை குறைவாக கூறுகிறேன் எ்னறால் சரியல்ல. என் மகன் விபத்து சமயத்தில் முதலாம் ஆண்டு கல்லுாாியில் படித்தார் என்றால் சரி. நான் பல்வேறு தலைப்புகளில் கோாியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சாியல்ல. விபத்து பேருந்து ஓட்டுநரின் அஜாக்கிருதையால் நடைபெற்றுள்ள காரணத்தால் 1,2ம் எதிா்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.